## செய்தி குறிப்பு

புதுவை, நாள்
.05.2013

புதுச்சேரி அரசு தொழிலாளர் துறை வேலைவாய்ப்பு அலுவலகம் 2012—2013 ஆம் கல்வியாண்டில் பத்தாம் மற்றும் பனிரெண்டாம் வகுப்பு தேர்வான மாணவ, மாணவிகள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்ய ஆயத்த படுத்தும் விதமாகவும் ஒரே இடத்தில் ஏற்படும் கூட்ட நெரிசலை தவிர்க்கவும், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மட்டுமல்லாமல், 7 வெவ்வேறு மையங்களில் பதிவதற்கான சிறப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது. சிறப்பு பதிவு செய்யப்படும் மையங்கள் கீழ்வருமாறு:—

1. தந்தை பெரியார் அரசு பெண்கள் மேல்நிலை பள்ளி, அரியாங்குப்பம்.
2. கஸ்தூரிபாய் அரசு பெண்கள் மேல்நிலை பள்ளி, பாகூர்.
3. கலைஞர் கருணாநிதி அரசு மேல்நிலை பள்ளி, கலிதீர்தாள்குப்பம்.
4. அறிஞர் அண்ணா அரசு மேல்நிலை பள்ளி, கூனிச்சம்பட்டு.
5. கண்ணகி அரசு பெண்கள் மேல்நிலை பள்ளி, வில்லியனூர்.
6. செவாலியே செல்லான் அரசு மேல்நிலை பள்ளி, காலாபேட்.
7. மறைமலை அடிகள் அரசு மேல்நிலை பள்ளி, ஏம்பலம்.

காரைக்கால் பகுதியை பொருத்தவரை, காரை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மட்டுமல்லாமல் கீழ் காணும் மையங்களில் சிறப்பு பதிவுக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<u>12ஆம் வகுப்பு பதிவு செய்யப்படும் மையம்</u>:

1. தந்தை பெரியார் அரசு மேல்நிலை பள்ளி, காரைக்கால்.

<u>10ஆம் வகுப்பு பதிவு செய்யப்படும் மையங்கள்:</u>

1. அரசு மேல்நிலை பள்ளி, திருப்பட்டினம்.
2. அரசு பெண்கள் மேல்நிலை பள்ளி, திருநள்ளார்.
3. வ.உ.சி. அரசு மேல்நிலை பள்ளி, கோட்டுச்சேரி

மேற்கண்ட பதிவு மையங்களில் பதிவதற்காக சிறப்பு இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மையங்களில், 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 3 நாட்களுக்கு 28.05.2013 முதல் 30.05.2013 வரையும், 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ் கொடுக்கப்பட்ட அன்று முதல் 5 தினங்களுக்கும் காலை 09:00 மணி முதல் மாலை 05:00 மணி வரை இயங்கும்.

பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் முன்பு பதிவுசெய்துள்ள வேலை வாய்ப்பு அடையாள அட்டை மற்றும் பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மதிப்பெண் பட்டியல் ஆகியவற்றை கொண்டு வந்து தங்களுக்கு அருகில் உள்ள மையத்தில் கூடுதல் பதிவை செய்து கொள்ளலாம்.

பத்தாம் வகுப்பு தேர்வு எழுதியிருக்கும் மாணவர்கள் தங்களின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் மற்றும் நிரந்தர ஒருங்கிணைந்த சான்றிதழையும் எடுத்து வந்து மேற்கண்ட சிறப்பு பதிவு மையங்களில் தங்களுக்கு அருகில் உள்ள மையத்தில் புதிதாக பதிவு செய்து கொள்ளலாம்.

இந்த வாய்ப்பை மாணவ, மாணவிகள் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(பெ. ராஜவேலு)
மாண்புமிகு அமைச்சர்
(தொழிலாளர் நலம் மற்றும் வேலை வாய்ப்பு)